

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள தென் கொரியா நாட்டு துணைத் தூதர் சாங் நியுன் கிம் (Mr. Chang Nyun Kim) சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் கே. நந்தகுமார், தென் கொரியா நாட்டு தூதரகத்தின் கலாச்சாரம் மற்றும் பொருளாதார ஆராய்ச்சியாளர் ஹுவாங் ஜுன் சிக் (Mr. Hwang Joon Sik), KOTRA இயக்குநர் ஜி ஹுவான் யுன் (Mr. Ji Hwan Eun) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2023) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் திருநெல்வேலியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் வணிக வளாகம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் விற்பனை நிலையம் மற்றும் 2 கோடியே 28 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாவட்ட அளவிலான சாயக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்து விட்ட சொல்!

# சென்னையை ஊர் என்பதா? உயிர் என்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக. 23 - முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப்பதிவில் "கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்து விட்ட சொல் என்பதா? ஊர் என்பதா? உயிர் என்பதா? சென்னையை?" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.




இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

**பேரறிஞர் அண்ணா தமிழ் நிலத்துக்கு, தமிழ்நாடெனப் பெயர் சூட்டினார். தமிழினத் தலைவர் கலைஞர் தமிழ்நாட்டின் தலைநகருக்குச் சென்னை எனப் பெயர் மாற்றினார்!**

**கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்துவிட்ட சொல் என்பதா ஊர் என்பதா உயிர் என்பதா சென்னையை?**

**சென்னை ஒட்டுமொத்த இந்தியாவைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடி. பன்முகத் தன்மையின் சமத்துவச் சங்கமம்!**

**வாழிய வள்ளலார் சொன்ன 'தருமமிகு சென்னை'!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று (22.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், சென்னை பள்ளி மாணவர்களின் "அக்கம் பக்கம்" என்ற புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், 'தி இந்து' குழுமத்தின் தலைவர் திருமதி நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என். ராம், என். முரளி, என்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


